**செய்தி வெளியீடு எண் : 1926** **நாள் : 03.11.2022**

**செய்தி வெளியீடு**

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் உள்ள வடக்கு கோடைமேலழகியான் கால்வாய், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால் கால்வாய், மருதூர் கீழக்கால் கால்வாய், தெற்கு பிரதான கால்வாய் மற்றும் வடக்கு பிரதான கால்வாய் ஆகியவைகளின் கீழுள்ள நேரடி மற்றும் மறைமுக பாசனப் பரப்புகளுக்கு 04.11.2022 முதல் 31.03.2023 முடிய (148 நாட்கள்) பிசான பருவ சாகுபடிக்கும் நாற்று பாவுதல் மற்றும் நடவுதல் போன்ற பணிகளுக்காகவும்,குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்காகவும் 19604.29 மி.க.அடி தண்ணீரை பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 86,107 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**
**நீர்வளத்துறை**

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in